ஓமந்தூரார் அரசினர் தோட்டம் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில்

# இளைஞருக்கு வெற்றிகரமாக நடத்தப்பட்ட இருதய மாற்று அறுவை சிகிச்சை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!



சென்னை, செப். 5 -

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில், புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி பகுதியைச் சார்ந்த திரு.அஜித்குமார் (வயது 27) என்பவருக்கு இருதய மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டு நலமுடன் வீடு திரும்ப உள்ளார். என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார். மேலும் அவரை நேரில் நலம் விசாரித்து, சிகிச்சை அளித்த மருத்துவக்குழுவினரை பாராட்டி, வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் தொடர்ந்து 11வது இருதய மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டு அறுவை செய்து கொண்ட நபர் இன்று வீடு திரும்ப உள்ளார். அவரை நேரில் சந்தித்து நலம் விசாரித்து இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்த மருத்துவக்குழுவினரை பாராட்டும் வகையிலான நிகழ்ச்சி தற்போது நடைபெற்றுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஆலங்குடி பகுதியில் இருந்து திரு.அஜித்குமார் என்கின்ற 27 வயது நபர் வெளிநாடுகளில் பணியாற்றிக் கொண்டிருந்தவர். அங்கே அவருக்கு இருதய மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படுவதால் அங்கு பணியிலிருந்து இந்தியாவிற்கே திருப்பி அனுப்பப்பட்டார். திரும்ப வந்தவர் கடந்த ஜூலை திங்கள் 3ஆம் தேதி ஓமந்தூரார் பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் இருதய மாற்று அறுவை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த 57 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் சாலை விபத்தில் படுகாயமடைந்தவர், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் மூளைச்சாவு அடைந்ததால் அவரிடத்திடமிருந்து இருதயம் பெற்று இவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. கடந்த ஆகஸ்டு திங்கள் 22ஆம் தேதி அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டு, இன்று அவர் இல்லம் திரும்புகிறார். இவருடன் சேர்த்து 11வது இருதய மாற்று அறுவை சிகிச்சைகள் இது வரை நடைபெற்று இருக்கின்றது. இதனை ஊக்கப்படுத்து கின்ற வகையிலும், எதிர்காலத்தில் கூடுதலாக செய்ய வைக்கும் நிலையிலும் இந்த நிகழ்ச்சி நடைபெற்று இருக்கிறது.

### ஓமந்தூரார் பன்னோக்கு மருத்துவமனை சிறப்புகள் !

சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனையைப் பொறுத்தவரை, கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னால் வரை தினந்தோறும் வரும் புறநோயாளிகளின் எண்ணிக்கை 500லிருந்து 700 வரை இருந்தது. இன்றைக்கு இந்த எண்ணிக்கை 2000 வரை உயர்ந்திருக்கிறது. 4 மடங்கு கூடுதலாக இன்றைக்கு பொதுமக்கள் பயன்பெற இம்மருத்துவமனையை நாடி வருகிறார்கள். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னால் வரை உள்நோயாளிகளின் எண்ணிக்கை 250 என்கின்ற எண்ணிக்கையில் இருந்தது. தற்போது 500 வரை உள்நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது.

உள்நோயாளிகளின் எண்ணிக்கையும் இருமடங்காக பெருகியிருக்கிறது. அதே போல் இருதயத்துறை மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதனால் நான் சொன்ன 2000 புறநோயாளிகளில் ஏறத்தாழ 500க்கும் மேற்பட்டவர்கள் இருதயம் பிரிவிற்கு மட்டுமே சிகிச்சை பெற வருகின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதுமட்டும் அல்லாமல் இந்த மருத்துவமனையில் ஒவ்வொரு மாதமும் 320க்கும் அதிகமான ஆஞ்சியோகிராம் மற்றும் ஆஞ்சியோ பிளாஸ்டிக் சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகிறது. மிகவும் சிக்கலான உயிர் காக்கும் சிகிச்சைகள் செய்யும் International nuero radiology பிரிவும் இம்மருத்துவமனையில் சிறப்பாக இயங்கி கொண்டிருக்கிறது. சென்னையில் உள்ள அரசு மருத்துவமனைகளை பொறுத்தவரை இத்துறை இம்மருத்துவமனையில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது சிறப்புக்குரிய ஒன்று. அதேபோல், Crainotomy செய்யாமலேயே நுண்துளை மூலமாக மூளையில் உள்ள இரத்தம் நாள பிரச்சினைகளை சரிசெய்யும் முறை இம்மருத்துவமனையில் கையாளப்பட்டு வருகிறது. இதுவரை 7000க்கும் மேற்பட்ட சிகிச்சைகள் இதன்மூலம் அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த மருத்துவமனையில் உயிர்காக்கும் ICU படுக்கை வசதிகள், கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னால் வரை வெறும் 35 மட்டுமே இருந்தது. அது தற்போது 135ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. Moternal Screening analysis என்னும் அதிநவீன கருவி ஒன்று, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் இங்கே தொடங்கி வைக்கப்பட்டது. அந்தக் கருவியின் மூலம் கருவுற்ற ஒரிரு வாரங்களுக்குள்ளேயே குழந்தைகளின் வளர்ச்சித் தன்மைக் குறித்து அறிந்துக் கொள்வதற்கு அந்தக் கருவி இங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள அரசு மருத்துவமனைகளில் முதன்முறையாக அந்த இயக்கம் என்பது இந்த மருத்துவமனையில் இருந்துக் கொண்டிருக்கிறது.

இந்தியாவில் உள்ள எந்த ஒரு அரசு மருத்துவமனைகளிலும் இல்லாத புதிய வசதி தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இங்கு தொடங்கி வைத்துள்ளார். ரூ.34 கோடி செலவில் ரோபோடிக் புற்றுநோய் உபகரணம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதற்கான ரோபோடிக் புற்றுநோய் உபகரணம் ரூ.34 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு தற்போது மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது தொடங்கிய நாள் முதல் இன்று வரை 170 அறுவை சிகிச்சைகள் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பெரிய அளவிலான அறுவை சிகிச்சைகள் இல்லாமல் ரோபோடிக் எக்குப்மென்ட் மூலம் அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. இது பெரிய அளவில் அவர்களுக்கு பயன் தந்திருக்கிறது. அந்தவகையில் இம்மருத்துவமனை பல்வேறு வசதிகளை உள்ளடக்கியுள்ளது.

அதேபோல் இம்மருத்துவமனையைப் பொறுத்தவரை Pain Medicine மருத்துவச் சேவை வசதி இங்கு இருக்கின்றது. அதேபோல் மிகவும் அரிதான வசதிகளுள் ஒன்றான Nuclear Medicine, sports medicine போன்ற துறைகளும் இருக்கின்றது. விளையாட்டு வீரர்களுக்கு பாதிப்பு ஏற்படும் போது, அவர்களுக்கென்ற பிரத்யேக துறை ஒன்றும், இங்கு பயன்பாட்டில் இருந்துக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் DRNB Interventional Radiology, Neurology, Vascular Surgery, DNB Radio therapy, Fellowship in pain Medicine ஆரம்பிக்கப்பட்டு post Graduate Institute ஆகவும் உருவெடுத்திருக்கிறது.

### உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள்

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள், உறுப்பு மாற்று அறுவை தானங்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு இன்று இந்தியாவில் முதலிடத்தில், 2008ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5ஆம் தேதி தமிழ்நாட்டின் அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான் மூளைச்சாவு உறுப்பு மாற்று சிகிச்சை திட்டத்தினை தமிழ்நாட்டில் தொடங்கி வைத்தார். இந்த மூளைச் சாவு அடைந்தவர்களிடம் இருந்து உறுப்பு மாற்று சிகிச்சைகள், உறுப்பு தானம் பெறுவது என்பது அன்று முதல் விழிப்புணர்வு பெற தொடங்கி இன்றைக்கு இந்தியா முழுவதிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் மூளைச் சாவு உறுப்பு மாற்று சிகிச்சை என்பது தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையமாக நாம் செய்யப்பட்டது. கடந்த ஜூலை திங்கள் 31ஆம் தேதி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர்களுடன் கூட்டம் நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் அரசு மருத்துவமனைகளில் Transplant Hospital என்று சொல்லக்கூடிய வகையில் அரசு மருத்துவமனைகள் இருப்பது 13 இடங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தனியார் மருத்துவமனைகளைப் பொறுத்தவரை 128 மருத்துவமனைகள் அனுமதி பெற்று உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகின்றனர். அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர்கள் 27 அரசு மருத்துவமனைகளில் NTORC (Non Trnasplant Organ Retrieval Centres) வேண்டும் என்கின்ற கோரிக்கையினை வைத்தார்கள். உடனடியாக அவர்களுக்கு அந்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டு 27 புதிய அரசு மருத்துவமனைகளுக்கு Non Transplant Organ equipment centers என்று சொல்லக்கூடிய உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் மட்டும் தான் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 22 லட்சம் ரூபாய் வரையில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் 2014 முதல் தற்போது வரை மட்டும் 376 நோயாளிகள் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு பயனடைந்துள்ளனர். மேலும் 23092023 உறுப்புதான கொடை தினம் மிகச் சிறந்த வகையில் நடத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. NOTTO (NATIONAL ORGAN AND TISSUE TRANSPLANTATION ORGANISATION) என்கிற தேசிய உறுப்பு தான திட்ட டெல்லி அமைப்பு இந்திய மாநிலங்களில் 5 பகுதிகளாக பிரித்திருக்கிறது.

மேலும் ROTTO SOUTH என்பது தமிழ்நாட்டை மையமாக கொண்டு கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு தலைமையகமாக செயல்பட்டு வருகிறது. கடந்த 0308 2023 இந்திய அளவில் உறுப்புத்தான திட்டத்தில் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு, அதற்கான விருதை நேரில் சென்று ஒன்றிய அரசிடமிருந்து பெற்றுக் கொண்டோம். தமிழகத்தில் 2392023 தினத்தை தமிழக உறுப்புதான கொடை நாளாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் இந்த ஆண்டு தமிழகத்தை தலைமையகமாகக் கொண்ட NOTTO SOUTH உறுப்பினர்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா மற்றும் புதுச்சேரி மாநிலங்களின் சுகாதாரத் துறை அமைச்சர் பெருமக்களை பங்கேற்க அழைத்துள்ளோம். இந்நிகழ்ச்சி கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பான முறையில் நடத்திட திட்டமிட்டுள்ளோம் என்று அமைச்சர்மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், மரு. விமலா, பேராசிரியர்.மரு. மனோகரன், மரு.கோபாலகிருஷ்ணன் மற்றும் மருத்துவக்குழுவினர் உடனிருந்தனர்.



சென்னை, கிண்டி, ஐ.டி.சி.ஹோட்டலில், ஒன்றிய துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் சர்பானந்தா சோனவால் தலைமையில் நேற்று (04.09.2023) நடைபெற்ற "குளோபல் கடல்சார் இந்திய உச்சி மாநாடு சாலைக் கண்காட்சியில்(Road Show), பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், டி.கே. ராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ்., செயலாளர், ஒன்றிய துறைமுகங்கள் கப்பல், நீர்வழித்தடம், எஸ்.கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., கூடுதல் தலைமைச் செயலாளர், தொழில்துறை, பிரதீப்யாதவ், ஐ.ஏ.எஸ்., கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலைத்துறை, சுனில் பாலிவால், ஐ.ஏ.எஸ்., தலைவர், சென்னை துறைமுக ஆணையம், எஸ்.விஸ்வநாதன், ஐ.ஏ.எஸ்., துணை தலைவர், சென்னை துறைமுக ஆணையம், திருமதி.ஜெ.பி.ஜரின் சிந்தியா, ஐ.ஏ.எஸ்., நிர்வாக இயக்குநர், காமராசர் துறைமுகம், பிமல்குமார்ஜா தலைவர்பொறுப்பு வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பங்கு பெற்றார்கள்.

செப் . - 15 பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிக்கு வருகைதரும்

# திராவிட மாடல் நாயகருக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

## காஞ்சி தெற்கு மாவட்ட கூட்டத்தில் தீர்மானம்! க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம், செப்.5-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் உத்திரமேரூர் இந்திராணி திருமண மண்டபத்தில், மாவட்ட கழக அவை தலைவர் ச.இனியரசு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர், எம்.எல்.ஏ. வரவேற்று பேசினார்.

மாவட்ட துணைச்செயலாளர்கள் டி.வி.கோகுலகண்ணன், திருமதி.கு.மலர்விழி, மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. மாநில இளைஞரணி துணை செயலாளர் ப. அப்துல் மாலிக், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா.நாகன், டி.ஆர்.நாராயணன், எம்.எஸ்.சுகுமார், காஞ்சிபுரம் மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்செல்வன், காஞ்சிபுரம் மேயர் மகாலட்சுமி யுவராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள். வெளிக்காடு ஏழுமலை, கே.ராஜேந்திரன், எஸ்.டி.பிரேம்சந்த் பொன். சசிக்குமார், எஸ்.சிகாமணி, எஸ்.எழிலரசி, மதுராந்தகம் நகர செயலாளர். கே.குமார், காஞ்சிபுரம் முருகன் பட்டு கூட்டுறவு சங்க தலைவர் ஏ. எஸ்.முத்துசெல்வம், ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், பி.எம்.குமார், க.குமணன், டிகுமார், பி.சேகர், பொன்.சிவகுமார், சத்திய சாய், கே.கண்ணன், ஜி.தம்பி, கே.எஸ்.ராமச்சந்திரன், எஸ். ஏழுமலை, இ.சரவணன், பி.எம்.பாபு, எம்.எஸ்.பாபு. காஞ்சிபுரம் மாநகர பகுதி செயலாளர்கள். எஸ்.சந்துரு, கே.திலகர், க.வெங்கடேசன், பேரூர் செயலாளர்கள். என். எஸ்.பாரிவள்ளல், என்.பாண்டியன், மோகன்தாஸ், வி.எழிலரசன், சுந்தரமூர்த்தி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ.யுவராஜ், குணசேகரன், இ.அசோகன், நாத்திகம் நாகராஜன், கண்ணதாசன், சசிக்குமார், சி.ராதாகிரு ஷ்ணன், எஸ்.மாலதி, டாக்டர் திவாகர், வ.மலர்மன்னன், வ.வெங்கட்ராமன், டி.ஜெய் கணேஷ், கலைச்செல்வி ஜகன்நாதன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பெ.மணி, க.பால்ராஜ், டி.சஞ்சய்காந்தி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர், எம்.எல்.ஏ. தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15 அன்று கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை தொடங்கி வைக்க வருகை தரும் முதல் அமைச்சர் நம் கழகத்தலைவர் அவர்களை காஞ்சிபுரம் வரும் வழியெங்கும் திரளாக திரண்டு நின்று வரவேற்பு அளிப்பது எனவும், தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றி தமிழ்நாடு மகளிர் மனதில் இடம் பிடித்த முதல்வர் அவர்களுக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. கழகம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

இந்திய வரலாற்றில் இல்லாத வகையில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் 17 லட்சம் பேருக்கு 31 ஆயிரம் பள்ளிகளில் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை வழங்கி வரலாற்றில் இடம் பிடித்துள்ள நம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியும் வாழ்த்துக்களையும் மாவட்ட கழகம் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழ்நாட்டிற்கு விடியலை தந்த நம் தலைவர் அகில இந்திய அளவில் 10 ஆண்டுகால மோசடி ஆட்சியில் இருந்து இந்தியாவை காப்பாற்றுகின்ற வகையில் தேசிய அளவில் I.N.D.I.A. கூட்டணியை உருவாக்குகின்ற முயற்சியில் பெரிதும் ஈடுபட்டு, பாட்னா, பெங்களூர், மும்பை என்ற மூன்று கட்ட கூட்டங்களில் இந்தியா கூட்டணி நல்ல முன்னெடுப்பில் செல்வதற்கு உறுதுணையாக இருந்து சிறப்பாக வழி நடத்துவதற்கு நம் மாவட்ட கழகம் கழக தலைவருக்கு நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

கடந்த ஆகஸ்ட் 19 அன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை தந்து காஞ்சிபுரத்தில் நலத்திட்ட உதவிகள், காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியத்தில் கொடியேற்று விழா உத்திரமேரூரில் இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் மதுராந்தகத்தில் நடைபெற்ற கலைஞர்



முழு உருவ சிலை திறப்பு விழா கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி, பள்ளி மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கி சிறப்பித்த அவருக்கும், இந்த நகழ்ச்சி நடத்தி உறுதுணையாக இருந்த நிர்வாகிகள் அனைவருக்கும் மாவட்ட கழகம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

இந்திய தேர்தல் ஆணையம் 01—01-2024 தகுதி ஏற்பு நாளாக கொண்டு எதிர்வரும் 05-01-2024 அன்று வாக்காளர் பட்டியல் வெளியிட பல்வேறு முன் திருத்த நடவடிக்கைகளுக்காக அறிவுரைகள் வழங்கி இருக்கிறது.

2004-ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கும் முறை திருத்தப்பணிகள் செய்திட கீழ்க்கண்டுள்ள விவரப்படி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் சிறப்பு முகாம் அனைத்து வாக்குச்சாவடிகளில் நடைபெற உள்ளது.

04-11-2023 சனி, 05-11-2023 ஞாயிறு, 18-11-2023 சனி, 10-11-2023 ஞாயிறு.

எனவே, தங்கள் ஆளுகைக்குட்பட்ட வாக்குச்சாவடி முகவர்களுக்கு தகவல் தெரிவித்து நாளது தேதி வரை வாக்காளர் பட்டியல் பெயர் சேர்க்கப்படாமல் விடுபட்டவர்கள், இளம் வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்த்திடவும், மேலும் வரைவு வாக்குச்சாவடி மையங்கள் இடம் மாற்றம், பெயர் மாற்றம், புதிய வாக்குச்சாவடி அமைத்தல் தொடர்பான தங்களின் கோரிக்கைகளை மாவட்ட கழகத்திற்கோ அல்லது சம்மந்தப்பட்ட, மாநகர, நகர, ஒன்றிய பகுதி பேரூர் செயலாளர்களுக்கோ, அரசு ஊழியர்களுக்கோ, தெரியப்படுத்தி தீர்வுகாண கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

# மாங்காடு நகர தி.மு.க செயற்குழுக் கூட்டம்!

## நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப். 5 -

மாங்காடு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மாங்காடு நகரக் கழக அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (5/09/2023 ) மாலை 6.30 மணியளவில் மாங்காடு நகர கழக அவைத்தலைவர் எம்.எஸ்.மகேந்திரன் தலைமையில் நகர கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது .

எனவே நகரக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு கழக செயலாளர்கள், நகரமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

இக்கூட்டத்தில் தெருமுனைப் பிரச்சாரப் பொதுக்கூட்டம் , பூத் கமிட்டி வாரியாக ஆலோசனைக் கூட்டம், கழக வளர்ச்சி குறித்து ஆலோசிக்கப் படுவதாக நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா தெரிவித்துள்ளார்.

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ.,அறிவிப்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.கழக மகளிர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம் நாளை 6-9- 2023 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் திருவள்ளூர் ஆயில்மில் அருகில் உள்ள IVR திருமண மண்டபத்தில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சரஸ்வதி சந்திரசேகர் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கழக மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் சேலம் சுஜாதா, கழக உயர்நிலைசெயல்திட்டகுழுஉறுப்பினரும்,அரக்கோணம்நாடாளுமன்றஉறுப்பினருமான டாக்டர். எஸ்.ஜெகத்ரட்சகன், தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன் உள்ளிட்ட தலைமை செயற்குழு உறுப்பினர், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துக் கொள்கின்றனர்.

மேற்படி கூட்டத்திற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட மகளிர் அணி தலைவர், துணைத்தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் குறித்து. மகளிர் அணியில் புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் குறித்து. வேலூரில் நடைபெற உள்ள கழக முப்பெரும் விழா. 2024ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் பணிகள் குறித்து. கழக ஆக்கப் பணிகள்.

திருத்தணி **எஸ்.சந்திரன்**,எம்.எல்.ஏ.,
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ.,அறிவிப்பு!



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.கழக வழக்கறிஞர்அணி அவசர ஆலோசனைக் கூட்டம்நாளை (6-9-2023 புதன்கிழமை) காலை 11.00 மணியளவில்திருவள்ளூர் ஆயில்மில் அருகில் உள்ளIVR திருமண மண்டபத்தில் மாவட்டவழக்கறிஞர் அணி அமைப்பாளர் பி.கே.நாகராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினரும், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர். எஸ்.ஜெகத்ர ட்சகன், தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன்உள்ளிட்ட தலைமை செயற்குழு உறுப்பினர், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துக் கொள்கின்றனர்.

மேற்படி கூட்டத்திற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட வழக்கறிஞர் அணி தலைவர், துணைத்தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் குறித்து. மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் அறிமுகம். வழக்கறிஞர் அணியில் புதிய உறுப்பினர்கள் சேர்த்தல்/புதுப்பித்தல் குறித்து. வேலூரில் நடைபெற உள்ள கழக முப்பெரும் விழா.2024ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் பணிகள். 6. கழக ஆக்கப் பணிகள்.

திருத்தணி **எஸ்.சந்திரன்**,எம்.எல்.ஏ.,
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம் எளாவூரில் துராப்பள்ளம் கடை வீதியில் 248 மாணவ மாணவியர் 77 நிமிடங்கள் இடைவிடாது கின்னஸ் சாதனைக்கான சிலம்பம் சுற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது, மாவட்ட செயலாளர் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் பங்கேற்று சிலம்பம் சுற்றியவர்களுக்கு பரிசுகளை வழங்கினார், உடன் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், ந.பரிமளம், எஸ்.ராமஜெயம், மு.பாஸ்கர், அ. வேதாச்சலம், ஆர்.எஸ்.காளத்தி, மு.சுப்பிரமணி, யூனுஸ், பாலு, சித்திக், பி.அறிவழகன், சா.தியாகராஜன், கோவிந்தன், நரேந்திரன், பழனி, சீனு, ராஜ்குமார், ஏழுமலை, விநாயகம், மாரிமுத்து, ரகு, மகாலிங்கம், இரா. பாரதி, இளவரசன், ராஜா, முருகேசன், சீனிவாசன், சிலம்பம் கலைக் கூட பொறுப்பாளர்கள் எஸ்.ரவி, தமிழ்செல்வன், ஆர்.முரளி, டாக்டர் ஆர்.கே.தினகரன், ஜோதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சியில் உள்ள எஸ்.எம். நகர் அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் காமராஜர் நகரில் உள்ள அரசு பெண்கள் மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா இலவச மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ 803 மாணவ மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை வழங்கினார். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், பகுதி கழகச் செயலாளர்கள் பேபிசேகர், ஜி.நாராயணபிரசாத், ஜி.ராஜேந்திரன் உள்பட மண்டல குழு தலைவர்கள் கவுன்சிலர்கள் தலைமை ஆசிரியர்கள் கழக நிர்வாகிகள் உள்பட பலர் உள்ளனர்.